# 15 நால்வரும் நாற்பாதமும்

பிறப்புக்களின் மிகச் சிறந்தது மானிடப்பிறப்பாகும். ஆதலினால்தான் ''அரிது அரிது மானிடராதல் அரிது'' என்றார் ஔவைப்பிராட்டியார். மனிதன் பகுத்தறிவு உடையன் ஆதலால் அவன் ஒருவரோடு பேசவும், கருத்து பரிமாற்றம் செய்து கொள்ளவும் உறவு கொண்டாடவும் முடிகிறது. இத்தகைய ஆற்றல் படைத்த மனிதனை நோக்கியே சமய நூல்கள், மனிதன் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து இறை இன்பத்தை அடைய வேண்டும் என்று வற்புறுத்துகின்றன. இன்பம் இருவகைப்படும். இல்லற இன்பம் வீட்டின்பம் என்பன அவை ஆகும். இல்லற இன்பத்தை உலகியல் இன்பம் பாசம் எனவும் கூறுவர். இல்லற இன்பம் நிலையற்றது. துன்பம் நிறைந்தது. அதனால் இவ்வின்பத்தை சிற்றின்பம் என்பர். வீட்டின்பம் நிலையானது. துன்பம் அற்றது. அதனால் அதனைப் பேரின்பம் என்பர். மனிதன் அடைய வேண்டியது பேரின்பமாகும். பிறவாமையாகிய இன்பத்தை அடைய முயற்சிப்பதே மனிதப் பிறப்பின் இலட்சியமாக இருக்க வேண்டும் என்று சமய நூல்கள் குறிப்பிடும். வீட்டின்பம் வீடுபேறு, விடுதலை, மெய்யின்பம், முத்தி, பேரின்பம் என்பன ஒருபொருட் சொற்கள் ஆகும். அப்பர் சுவாமிகள் தமது திருவங்க மாலைப் பதிகத்தில் வாழ்க்கை நிலையாமையையும் ஆன்மாவின் இலட்சியத்தையும் பின்வருமாறு பாடியிருப்பது இங்கு அவதானிக்கத்தக்கதாகும்

''உற்றா ராருளரோ - வுயிர்
கொண்டுபோம் பொழுது
குற்றாலத்துறை கூத்தனல் லானமக்
உற்றா ராருள ரோ''

''தேடிக் கண்டுகொண்டேன்- றிரு
மாலோடு நான்முகனும்
தேடி தேடொணாத் தேவனை யென்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்''

இத்தகைய கருத்தினையே நாவலர்பெருமான் பின்வருமாறு குறிப்பிடுகிறார். ''இந்த சரீரம் நமக்கு கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டே யாம்''

நாம் இங்கு முத்தியின்பத்தை எவ்வாறு அடையமுடியும் என்பதையும் அதற்கான வழிமுறைகள் யாவை என்பதையும் சுருக்கமாக நோக்குவோம்

முத்தியின்பம் அல்லது வீட்டின்பத்தை அடைவதற்கு ஒவ்வொருவரும் தவம் செய்தல் வேண்டும். தவத்தின் பயனாகவேதான் முத்தி சித்திக்கும். வாழ்வுக்கு அதுவே அடிப்படை. நல்வினை செய்வதன் மூலமோ புண்ணியம் செய்வதன் மூலமோ தவத்தைப் பெற முடியும். புண்ணியம் இன்றேல் தவம் இல்லை. இப்புண்ணியம் பசு புண்ணியம், பதி புண்ணியம் என இரு வகைப்படும்.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

பசு புண்ணியம் வினை சார்ந்தது. உலகியல் இன்பத்தை வேண்டி இறைவனை நோக்கிச் செய்யப்படுபவை காமிகம் சார்ந்தது. இதனைப் பசு நல்வினை என்பர். இது நிலையற்றது. துன்பத்தை தருவது. இறப்புக்கும் பிறப்பிற்கும் காரணமானது. பதி புண்ணியம் பசு புண்ணியத்தின் நின்று வேறுபட்டது. அன்பும் அருளும்வேண்டி பற்றற்று சிவனை நோக்கிச் செய்யப்படும் புண்ணியங்களாகும். இதனை சிவ புண்ணியம் என்பர். இதனையே பதி நல்வினை என்றும் கூறுவர். இது நிலையான இன்பத்தைத் தருவது துன்பம் அற்றது. சிவ புண்ணியங்களை அல்லது தவத்தின் சாதனைகள் மூலமே அடைய முடிகிறது. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் சாதனைகளாலேயே தவத்தின் பயனை அடைய முடியும். இத்தவத்தின் பயனாய் இறைவன் தன் சொரூப நிலையில் (சிறப்பு நிலை ) நின்று விடுப்பட்டு பொது நிலைக்குச் சென்று தன்னை உட்படுத்தி உருவம் அருவம் அருவுருவம் வடிவங்களை எடுத்து தவமுடைய ஆன்மாக்களுக்கு அவற்றின் பக்குவ நிலைகளுக்கேற்ப அருள்பாலிப்பார். இறைவன் எடுக்கும் மூன்று வடிவங்களையும் திருமேனி என்பர். இத்திருமேனிகளை ஆன்மாக்கள் தமது பக்குவ நிலைக்கு ஏற்ப பூசிப்பதன்மூலம் முத்தி இன்பத்தைப் பெற முடியும் என்பது சைவ நூல்மரபு. ஆன்மாக்கள் ஞானத்தின் மூலமே பேரின்பத்தை அடையமுடியும். சரியை, கிரியை, யோகம், ஆகிய மூன்று நெறியும் ஞானத்தை அடைவதற்கான படிமுறைகளாகும். இதனாலேயே இறப்பியல் சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்றையும் தவம் என்பர் நூாலோர்.

மனம் மெய் மொழிகளினால் இயற்கையை நோக்கிச் செய்யப்படுபவை சிவ புண்ணியங்களாகும், அவை அளவில் பல. இவை அனைத்திலும் சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்றுள் அடக்கி நோக்குவர் சைவ நூலோர் இவைமூன்றும் ஞானத்தின் படிகள். சரியை கிரியை யோகம் ஞானம் ஆகிய நான்கும் இறைவனை அடைவதற்குரிய நாற்பாதம் என்பர். பாதம் வழி நெறி எனப்பொருள்படும். இறைவன் சிவனடியார் வழிபாடு, ஒழுக்கம், பக்தி, அருளாட்சி, அற்புதம் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்புகளைக் கொண்ட போதனைகள் நிகழ்த்தப்பட்டன. நாற்பாதங்களும் வகுக்கப்பட்டன. சாதனைகளுக்கு அடிப்படையாக அமைவது வழிபாடாகும். ஐம்பொறிகளை அடக்கி இறைவனை நோக்கி வழிப்பாடு இயற்றுவதாகும். ‘‘தெய்வம் என்பதோர் சித்த முண்டாகி ” என்னும் உணர்வு எப்பொழுது பிறக்கின்றதோ அப்போதே அவன் முத்திப் பேற்றுக்கான முதற்படியில் கால் பதிக்கின்றான் எனலாம், இதுவே சாதனையின் முதற்படியான சரியை நெறியாகும்.

## சரியை

‘‘சரியை என்பது சிவாலயத்திற்கும் சிவனடியார்களுக்கும் தொண்டு செய்வதாகும்.” ஆலயங்களில் இறைவனை வழிபடல் வழிப்பாட்டின் பொருட்டுத் திருக்கோயிலைக் கூட்டுதல், மெழுகுதல், கழுவுதல், திருவிளக்கு ஏற்றல், திருநந்தவனம் அமைத்தல், பூ எடுத்தல், பூமாலை தொடுத்தல், இறைவன்புகழ்

பாடுதல், சிவனடியாருக்கு குற்றேவல் செய்தல், உழவாரப்பணி செய்தல், பழங்கோயில்களை வேண்டும் அளவில் புதுப்பித்தல், புராணபடனம் செய்தல், கேட்டல், புராணக் கதைபடித்தல், யாத்திரை செய்தல் முதலான இன்னோரன்னபலவும் சரியைத் தொண்டுகளே ஆகும். சுருங்கக்கூறின் புறத் தொழில் அளவில் இறைவனது உருவத் திருமேனியை நோக்கி செய்யப்படுவன யாவும் சரியை வழிபாடாகும். சரியை நெறியில் திருக்கோயிலில் திருவிளக்கிடுதல் முதலான தொண்டுகள் சரியையிற் சரியை நெறியாகும். ஒருமூர்த்தியை வழிபடல் சரியையிற் கிரியை ஆகும். வழிபடும் கடவுளையும் சிவனையும் தியானித்தல் சரியையில் யோகம் ஆகும். சரியை வழிப்பாட்டால் அனுபவம் வாய்க்கப் பெறுவது சரியையில் ஞானமாகும்.

சரியை வழிப்பாட்டின் பயன் சிவசாலோபம் என்னும் முத்தியாகும். சிவ சாலோபம் என்பது சரியை வழி நின்றோர் சிவபெருமான் திருமேனி கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவலோகத்தில் போகங்களை அனுபவித்தல் ஆகும். இந்நெறியினைத் தாசமார்க்கம் என்பர். இது இறைவனை ஆண்டான் என்றும் தன்னை அடிமை என்றும் கருதி வழிபாடு இயற்றும் நெறியாகும்.

அப்பர் சுவாமிகள் சரியை நெறி நின்றே இறைவனை வழிபாடு செய்தார் என்பது சைவ நூல் மரபு. சிவசாலோபம் என்ற முத்தியினை பத முத்தி என்றும் அழைப்பர். அப்பர் சுவாமிகள் சரியை நெறி நின்று இறைவனை வழிபட்டார் என்பதற்கு அவரது பாடல்களும் உழவாரப்பணிகளும் சிறந்த எடுத்துக்காட்டுக்களாக விளங்குகின்றன. பின்வரும் பாடல் அதற்கோர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

> ''நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா
> நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
> புலர்வதன் முன் னலகிட்டு மெழுக்கும் மிட்டுப்
> பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடித்
> தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
> சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
> அலை புனல்சேர் செஞ்சடையெம் மாதீ யென்றும்
> மாரூரா வென்றென்றே யலறா நில்லே ''
>
> ( திருத்தாண்டகம்)

## கிரியை

கிரியை என்பது சிவலிங்கப் பெருமானை அகத்திலும் புறத்திலும் பூசித்தலாகும், இதனைச் சிறிது விளக்கமாக கூறின் சிவபெருமானது அருவத் திருமேனியாகிய சிவலிங்கமூர்த்தியை அணுகியிருந்து அப்பெருமானை மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன்றினாலும் அகத்திலும், புறத்திலும் பலவகை உபசாரங்களையும் முறைப்படி செய்து வழிபடுதலாகும். திருமலர்கள், திருமஞ்சனம் முதலியவற்றால் ஒப்பனை, தூபம், தீபம், உபசாரங்களை

ஏற்படுத்தல், வலம்செய்தல், பணிதல் தோத்திரம் என்பவற்றை செய்து வேண்டி நிற்றல் (பிரார்த்தனை) என்னும் இவ்வகைத் தொண்டே கிரியையாகும். இவற்றுள் பூசைப் பொருட்களைத் திரட்டல் கிரியையிற் சரியையாகும். புறத்தில்பூசித்தல் கிரியையில் கிரியை ஆகும். அகத்தில் பூசித்தல் கிரியையில் யோகம் ஆகும். மேற்கூறிய செயல்களால் (கிரியைகளால்) ஓர் அனுபவம் வாய்க்கப் பெறுதல் கிரியையிற் ஞானமாகும்.

கிரியை நெறியினை நன்கு கடைப்பிடித்து இறைவனை அகத்தும் புறத்தும் வழிபட்டு சித்தி பெற்ற நாயனார் ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்மந்தராகும். இதற்கு எடுத்துக்காட்டாக

''மறை மலி தரு மலரொடு முகை தருமலா புனகமிகு வளரொலி
நிறைபுனல் கொடு தளை நினைவொடு நிதயமும் வழிபடும் மடியார்
குலறவில் பதமணை தரவருள் குணமுடை யிறையுறை வனபதி
சிறை புனமலர் சிவபுரமது நினைபவர் செயமகள் தலைவரே''

என்னும் பதிகத்தினையும் ''தாவினையிட்டும் குலம் பலதொட்டும் ''என்று தொடங்கும் பதிகத்தினையும் இங்கு குறிப்பிடலாம். கிரியை நெறியின் பயன் சாமீபம் ஆகும். சாமீபம் என்பது கிரியை நெறியில் நின்றோர் மைந்தற்குரிய உரிமையோடு சிவனுக்கு அருகில் இருந்து போகங்களை நுகர்தலாகும். சாமீபம் பத முத்தி சார்ந்தது.

## யோகம்

யோகம் என்பது அகத் தொழில் ஒன்றால் மட்டுமே சிவபெருமானின் அருவத்திருமேனியை நோக்கி செய்யும் வழிப்படாகும். யோகம் இமயம், நியமம் ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி, என்னும் எட்டுவகைகளில் படிப்படியாக நிற்றலாம். இவ்வெட்டு உறுப்புக்களுள் முதல் நான்கும் யோகத்தில் சரியை ஆகும். பிரத்தியாகாரம், தாரணை ஆகிய இரண்டும் யோகத்தில் கிரியை ஆகும், தியானம் யோகத்தில் யோகம் ஆகும் சமாதி யோகத்தில் ஞானமாகும்.

யோக நெறியைக் கடைப்பிடித்து முத்தி பெற்ற நாயனார் தம்பிரான் தோழன் சுந்தரமூர்த்தி நாயனார் ஆவார். அதற்கு எடுத்துக்காட்டாக சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய பின்வரும் பதிகம் ஒன்றினை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம் அது வறுமாறு

''தேடுவன் தேடுவன் செம்மலர்ப் பாதங்கள் நாடோறும்
நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலே யொர் நல் விரல்
மாடுவன் மாடுவன் வன்கை பிடித்து மகிழ்ந்துனே
ஆடுவன் ஆடுவன் ஆமாந்தூர் தம் அடிகளே ''

யோக நெறியின் பயன் சாரூபம் எனும் முத்தியாகும். சாரூபமானது

அவ்வுலகங்களில் மைந்தரினும் சிறந்த தோழர் போல இப்புவனப் பதிகளோடு ஒத்த உருவும் பெயரும் முதலியன உடையவராய் அளவளாவி இருக்கும் உரிமையைப் பெற்றிருத்தலாம். இதனாலேயே இந்த யோக நெறியினைச் சகமார்க்கம் அல்லது தோழமை நெறி என்றனர் சைவ நூலோர்.

## ஞானம்

ஞானம் என்பது பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களின் இலட்சியங்களை அறிவிக்கும். ஞானநூல்களைக் கேட்டு சிந்தித்து தெளிந்து நிட்டைக்கூடல் ஆகும். கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைக்கூடல் ஆகிய நான்கும் முறையே ஞானத்திற்கு சரியையும், ஞானத்திற்கு கிரியையும், ஞானத்திற்கு யோகமும், ஞானத்திற்கு ஞானமும், ஆகும். ஞான நெறியில் நின்று முத்தியடைந்த நாயனார் மாணிக்கவாசகர் சுவாமிகள் ஆவார். மாணிக்கவாசகர் பாடிய பின்வரும் திருவாசகம் ஒன்றினை இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

‘முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பக்திநெறி அறிவித்து பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை யாண்ட
அத்தன்எனக் கருளிய வாறு ஆர்பெறுவார் அச்சோவே”

ஞானத்தின் முதல் நிலைக்கு பயன் (ஞானத்தில் சரியை) அபர முத்தியும், முடிநிலைக்குப் பயன் (ஞானத்தின் ஞானத்திற்கு) பரமுத்தியும் கிட்டும் அபரமுத்தியாவது சிவ தத்துவம் ஐந்திலும் (சிவம், சக்தி, சதாக்கியம், ஈசுரம் சுத்தவத்தை) உள்ள புவனங்களை அனுபவித்தலாம், பரமுத்தியாவது சிவனோடு ஆன்மா இரண்டறக்கலந்து நிற்றலைக் குறிக்கும். இதனையே சிவசாயுட்ச்சியம் என்பர். ஞானமார்க்கத்தை சன்மார்க்கம் என்றும் அழைப்பர்.

நாற்பாதங்கள் உபாயமார்க்கம் உண்மை மார்க்கம் என இருவகைப்படும். உபாயமார்க்கம் என்பது உலக இன்பத்தின் பொருட்டு செய்யப்படுதலாகும் உண்மை மார்க்கம் என்பது உலகப்பற்றைத் துறந்து திருவடிப் பேறாகிய முத்தியின்பத்தைக் கருத்தில் கொண்டு செய்வதாகும் இப்புண்ணியங்கள் கட்டாயமாகும்.

ஆன்மா நாற்பாதங்களில் ஈடுபடும் பொழுது அது இருவினையொப்பு மலப்பரிபாகம் சத்திநிபாதம், சீவன்முத்தி என்னும் படிநிலைகளைத் தாண்டியே முத்தியின்பத்தை அடைகிறது.

ஒவ்வொரு மனிதனும் தனது ஆத்ம லாபத்தின் பொருட்டு தமக்கு இயைந்த சாதனைகளைக் கடைப்பிடித்து நித்தியமான முத்தியின்பத்தை அடைய முயற்சிக்கவேண்டும். அதுவே இவ்வுலகத்தில் மனிதன் பிறந்ததின் பயனாகும்.

## பாடச் சுருக்கம்

- சைவசமயி ஒருவனது இறுதி இலட்சியம் மோட்சம் அடைதலாகும்.
- நாற்பாதம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நால் வகைப்படும்.
- நாற்பாதங்கள் மூலம் பதமுத்தியையும் பரமுத்தியையும் பெற முடியும்.
- சைவ சமய நாற்பாதங்களைப் படிப்படியாகக் கடைப்பிடித்து ஒழுகி பதமுத்தியை அடைய முயல வேண்டும்.

## ✍ பயிற்சிகள்

**அ. சுருக்கமான விடை தருக.**

1. சைவ சமயி ஒருவனது இறுதி இலட்சியம் யாது?
2. நாற்பாதங்களும் யாவை?
3 நாற்பாதங்களின் மூலம் முத்தியடைந்த நான்கு நாயன்மார்களும் யாவர்?
4. யோக நெறிக்குள் அடங்கும் அட்டாங்க யோகங்களும் யாவை?
5. சாயுச்சிய முத்தி என்றால் என்ன?

**ஆ. பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.**

1. சரியை நெறியைக் கடைப்பிடித்தவர்.......................................... ஆவர்.
2. பத முத்தி என்பது ....................................... ஆகும்.
3. திருஞான சம்பந்தர் ..................................... வயது வரை வாழ்ந்து ........................................... முத்தியைப் பெற்றார்.
4. பதினெட்டு வயது வரை வாழ்ந்து ஆடிச் சுவாதியில் முத்தியை ............................................ அடைந்தார்.
5. ஞான நெறியின் மூலம் முத்தியடைந்த நாயனார் ................................ ஆவார்.

## ௐ செயற்பாடு

- ♦ "நாற்பாதங்களும் நாயன்மார்களும்" என்ற தலைப்பில் வகுப்பறையில் ஐந்து நிமிடமளவில் பேச்சொன்றை நிகழ்த்துக.
- ♦ நாயன்மார்களின் குருபூசைகளை வகுப்பறையில் நடத்துக.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக